# 28

# இலங்கையிலுள்ள ஏனைய சமயங்கள் – 1



இலங்கை பல சமயங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடாகும். அவற்றுள் பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயம் என்பன பிரதானமானவை. சமய ரீதியாக வேறுபட்டாலும் ஒரே நாட்டவர் என்ற வகையில் அனைத்து சமயத்தினரும் மிகவும் புரிந்துணர்வுடன் செயற்படுவதன் மூலம் ஒளிமயமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு பங்காற்றலாம்.

முஸ்லிம்களாகிய நாம் ஏனைய சமயங்கள், சமயப் பெரியார்கள் மற்றும் சமய விழாக்கள் தொடர்பாக அறிந்திருப்பது சிறந்தது. அப்போது ஏனைய சமயத்தைப் பின்பற்றுபவர்களுடன் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ளலாம். சமயங்களின் போதனைகளுக்கும் அவர்களின் புனித சின்னங்களுக்கும் அகௌரவம் செய்யாமல் நடப்பது நமது கடமையாகும்.

## பௌத்த சமயம்

சுமார் இரண்டாயிரத்து அறுநூறு வருடங்களுக்கு முன்பு இந்தியாவின் வடகிழக்கில் இமாலயப் பெருமலையின் தென் சாரலில் ஓர் செலுத்தியான கிராமம் ஒன்று இருந்தது.



அதனைச் சாக்கிய குலத்தவர் ஆண்டனர். சாக்கிய குலத்தில் அப்போது இருந்த தலைவரின் பெயர் சுத்தோதனன். சுத்தோதனனது பட்டத்தரசியாய் விளங்கிய மகாமாயா தேவியின் வயிற்றில் புனித குமாரர் கருவுற்றிருந்த போது, நிறைமாத காலத்தில் தேவி தனது தாய் நாட்டை நோக்கி பேரூர்வலமாக செல்லும் வழியில் லும்பினி என்ற அழகிய சாலமரச் சோலையில் தனது முதலாவது குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு சித்தார்த்தன் என்று

பெயரிட்டனர். அக்குழந்தையின் குடும்பப் பெயர் கௌதமன். எனவே சித்தார்த்த கௌதமர் என அவர் பெயர் பெற்றார்.

அரச வாழ்க்கையின் சுகபோகங்களுக்கு மத்தியில் சித்தார்த்தர் வளர வளர அரசருக்குரிய கலைகள் யாவும் கற்பிக்கப்பட்டன. தனது பதினாறாவது வயதில் இளவரசி யசோதரையை மணந்தார்.

எனினும் தனது ஆடம்பரத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. எந்நேரமும் சிந்தனையில் மூழ்குவது வழக்கமானது. ஆனால் சுத்தோதனன் தனது மகனை இளவரசருக்குரிய வாழ்க்கையில் ஈடுபடுத்தப் பெரிதும் முயன்றார். ஆனால் சித்தார்த்தரோ வாழ்க்கையின் இயல்புகளைப் பற்றி அதிகமதிகம் சிந்திப்பதிலேயே ஈடுபட்டார்.

அதுவரை அனுபவித்த ஆடம்பர வாழ்க்கையினால் அவர் மக்களின் துன்பங்களைக் காணவில்லை. ஆனால் குறுகிய காலத்தில் பல துன்ப நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது. முதலில் வயோதிபர் ஒருவனையும் அடுத்து நோய் வாய்ப்பட்ட ஒருவனையும் அடுத்து இறந்த மனிதனையும் அவர் கண்டார். இவற்றின் பயனாக இவ்வுலகம் எவ்வளவு துன்பங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை அவருக்குத் தெளிவாயிற்று. அதன் பின்னர் அமைதியும் சாந்தமும் கொண்ட துறவி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரைப் போலவே இல்லற வாழ்வைத் துறக்க சித்தார்த்தருக்கு அவா உண்டானது. இதன் மூலம் தாமும் தம்போன்ற மக்களும் கவலைகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுதலை பெற வழி கிடைக்கும் என்று அவர் எண்ணினார்.

அவ்வேளை அவரின் மனைவி முதலாவது குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாம் தொடர்ந்தும் மாளிகையிலேயே தங்கினால் தன் மனைவியிலும் குழந்தையிலும் பாசம் அதிகரித்து மனித துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் தனது நோக்கத்திற்கு



தடையாக அமைந்துவிடும் என்று கருதி அரச பதவியைத் துறந்து மனைவியினதும் குழந்தையினதும் பாசத்தில் இருந்து நீங்கி வாழ்க்கையின் யதார்த்தத்தைத் தேடி தனது இருபத்தொன்பதாவது வயதில் சித்தார்த்தர் (குடும்ப வாழ்க்கையை விட்டு) புறப்பட்டார்.

இளவரசர் குடும்ப வாழ்க்கையை விட்டுவிட்டு ஞானிகளின் போதனைகளின் படி ஆறு ஆண்டுகள் இடத்திற்கிடம் சென்று கஷ்டங்களை அனுபவித்தார். பல சோதனை முயற்சிகளை மேற்கொண்டாலும் தான் தேடிய உண்மையை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. அதன் பின்பு அதிக சுக வாழ்க்கையிலிருந்தும் அதிக துன்பத்திலிருந்தும் விலகி நடுத்தர வாழ்க்கையை அனுசரித்தார்.

வெசாக் போயா தினமொன்றில், அவர் ஆழ்ந்த சிந்தனையோடு வெள்ளரசு மரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருந்தார். அத்தினம் அவர் தேடிய வாழ்வியல் உண்மை புலனாயிற்று. அவர் பின்வருவனவற்றை அறிந்து கொண்டார்.

- நாம் அறிந்தவரை வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நோயையும் துன்பத்தையும் அடைய வேண்டியுள்ளது. (துன்பம்)
- இவற்றிற்கு திட்டவட்டமான காரணம் உள்ளது. (துன்பத்திற்கு காரணம்)
- அக்காரணங்களைஅகற்றினால்கவலைநீங்கும். (துன்பத்தைஇல்லாதொழித்தல்)
- துன்பத்திலிருந்து அவர் விடுதலை பெறும் வழி உண்டு. (துன்பத்தை இல்லாதொழிக்கும் வழி)

மெய்யுணர்வு பெற்ற இக்காலம் முதல் மெய்ஞானி புத்தர் **(ஸம்மா ஸம் புது ரஜானன்)** என அவர் அழைக்கப்பட்டார்.

புத்தர், தம்மோடு இருந்தவர்களுக்கு உரையற்றினார். இவர்கள் அவருடைய சீடர்களாயினர். ஒருவன் தனது வாழ்க்கையில் அதிக காம இச்சையையும் ஆடம்பரத்தையும் தேடினால் தீங்கு நேரிடும். அதிக துன்பத்தைத் தேடிச் சென்றாலும் துன்பம் அடைய நேரிடும். ஆகையால் மிகைப்பட்ட போக்குகளுக்கு இடையிலான நடுநிலை நெறி தேடுதல் நலம்' என அறிவுரை வழங்கினார்.

அதன் பின்னர் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகள் அவர் வாழ்ந்தார். அக்காலம் முழுவதும் உலக மக்களின் நல்வாழ்விற்கென்றே அர்ப்பணித்தார். அஹிம்சை, அன்பு, கருணை பிறருக்குத் தொண்டு செய்தல், அவர்களின் நல்வாழ்வினைக் கருதுதல், நோயாளரைப் பேணல் என்பன புத்தர் பிரானின் வாழ்வின் முக்கிய அம்சங்களாகும்.

ஞானம் பெற்று 45 ஆவது வருடத்தில் வெசாக் தினம் ஒன்றில் புத்தர் குசிநார நகரில் உள்ள சால சோலையிலே உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது எண்பது. உலகிலுள்ள பௌத்தர்கள் யாவரும் கருணை நிறை புத்த மகான் பிறந்த, ஞானம் பெற்ற, பரிநிர்வாணம் என்ற மூன்றும் நடைபெற்ற வெசாக் நாளில் பெரும் விழா எடுத்துக்கொண்டாடுகின்றனர். புத்தரின் வரலாறும் உபதேசங்களும் பெருந் தொகையான மக்களுக்கு ஆசிகளை அளித்துக் கொண்டிருக்கின்றன.

**பயிற்சி**

*1. இலங்கை மக்கள் பின்பற்றும் சமயங்கள் நான்கைக் குறிப்பிடுக.*

*2. மகாமாயா தேவிக்குப் பிறந்த குழந்தைக்கு இடப்பட்ட பெயர் என்ன?*

*3. புத்தர் கண்ட துன்ப நிகழ்ச்சிகள் மூன்றும் எவை?*

*4. புத்தர் பிறந்ததும், ஞானம் பெற்றதும், உயிர் நீத்ததும் எத்தினத்தில் இடம்பெற்றது?*